செ.வெ.எண்: 45 நாள்: 21.07.2021

கரூர் மாவட்டம்

## கரூர் நகராட்சிப்பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 'தளபதி பல்நேரக்கு அரங்கம்' கட்ட நவடிக்கை எடுக்கப்படும் – மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் தகவல்

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. V செந்தில்பாலாஜி அவர்கள் கரூர் நகராட்சிக்குட்பட்ட அரிக்கம்பாளையம் மற்றும் தாந்தோணிமலை ஆதிதிராவிடர்நல மாணவர் விடுதி அருகே உள்ள பழைய காவல்கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 'தளபதி பல்நோக்கு அரங்கம்' கட்டுவதற்கான இடம் தேர்வு செய்வது குறித்து 21.07.2021 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் பொதுமக்களின் நலன் பேணும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அந்த வகையில் கரூர் நகராட்சியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 'தளபதி பல்நோக்கு அரங்கங்கள்' கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இன்று இதற்கான இடம் தேர்வு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. கரூர் நகராட்சிக்குட்பட்ட அரிக்கம்பாளையத்தில் 3.41 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நுண்ணியிர் உரம் தயாரிக்கும் மையம் அமைந்துள்ள இடத்திலும், தாந்தோணிமலையில் அரசு ஆதிதிராவிடர்நல மாணவியர் விடுதிக்கு அருகில் 1.01ஏக்கர் பரப்பளவில் பயன்பாடற்ற நிலையில் உள்ள காவல்கண்காணிப்பாளர் பழைய அலுவலக கட்டடம் அமைந்துள்ள இடத்திலும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையிலான 'தளபதி பல்நோக்கு அரங்கம்' கட்டுவதற்காக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இதில் தாந்தோணிமலை பகுதியில் அமையவுள்ள அனைத்து வசதிகளுடனும்கூடிய 'தளபதி பல்நோக்கு அரங்கம்' கட்டுவதற்கு ரூ.10.50 கோடி மதிப்பிலான திட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான பணிகள் துவக்கிவைக்கப்படும்.

அதேபோல காந்திகிராமத்தில் 2.08 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கான ஒருங்கிணைந்த பூங்கா அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து பொழுதுபோக்கு அம்சங்களுடன் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கிற்கான சிறந்த இடமாக அமையும் வகையில் ரூ.2 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த பூங்கா அமைப்பதற்கும், தெற்கு காந்திகிராமத்தில் 1.16ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள திருவள்ளுவர் பூங்காவில் ரூ.1.25கோடி மதிப்பில் நீச்சல் குளம் கட்டுவதற்கும் துறை அலுவலர்களால் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. கரூர் நகரப்பகுதி மக்களின் நலனை கருத்தில் கொண்டு இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பாலகணேஷ், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணியன், கரூர் நகராட்சி ஆணையர் திரு.சு.இராமமூர்த்தி, நகராட்சி பொறியாளர் திரு.நக்கீரன் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.